# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 27 செவ்வாய்க்கிழமை 12.08.2025 கதிர் 283









## பெருந்தொகையான கேரள கஞ்சாவுடன் சாவகச்சேரியில் இருவர் சிக்கினார்கள்!

சாவகச்சேரி, ஓக. 12

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அறுகுவெளி பகுதியில் பொலிஸார் நேற்று மாலை மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது பெருந்தொகையான கேரள கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

யாழ். மாவட்டத்தில் போதைப்பொருளைக் கட்டுப்படுத்தும்நோக்கில்பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வரும் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பியந்த வீரசூரியவின் நேரடி வழிகாட்டலில், யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமகாவின் ஆலோசனைக்கு அமைய, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சானக டீசில்வாவின் கண்காணிப்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பாலித்த

7➤

# யாழ். தொண்டைமானாறு கடல் நீரேரியில் அடையாளம் தெரியாத பெண்ணின் சடலம்

## பொலிஸார் தீவிர விசாரணை



யாழ்ப்பாணம், ஓக. 12

யாழ். தொண்டைமானாறு கடல் நீரேரியில் இருந்து இன்று மாலை பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட வந்த மீனவர்கள் கடலில் சடலம் ஒன்று மிதந்து இருப்பதைக் கண்டு அவசர தொலைபேசி இலக்கத்துக்குத் தகவல் வழங்கினர்.

உயிரிழந்தவர் பற்றிய விவரங்கள் அடையாளம்தெரியப்படாத நிலையில் சம்பவ இடத்துக்கு வந்த அச்சுவேலி பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 4 ஆயிரத்து 608 பேர் ஒரே நாளில் கைது!

கொழும்பு, ஓக. 12

நாடளாவிய ரீதியில் நேற்று திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 4 ஆயிரத்து 608 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

7➤

## ஜனாதிபதி யாழ். விஜயம்



யாழ்ப்பாணம், ஓக. 12

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

தான் ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருடம் நெருங்கும் நிலையில், வடக்கில் முக்கிய பல அபிவிருத்தித் திட்டங்களையும், உட்கட்டமைப்பு மேம்பாடுகளையும் செய்வதற்கு

7➤

## புதிய பொலிஸ்மா அதிபராக பிரியந்தவை நியமிக்க அரசமைப்பு பேரவை அங்கீகாரம்



கொழும்பு, ஓக. 12

இலங்கையின் 37 ஆவது பொலிஸ்மா அதிபராக, தற்போதைய பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவை நியமிக்க ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க முன்வைத்த பரிந்துரைக்கு அரசமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசமைப்பு பேரவை, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் இன்று பிற்பகல் கூடியிருந்த நிலையில், இதற்கான

7➤

## முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் இன்று துப்பாக்கிச்சூட்டில் உயிரிழப்பு



மீகொடை, ஓக. 12

மீகொடையில் இன்று செவ்வாய்க் கிழமை பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஹோமாகம பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சாந்த முதுங்கொடுவ (வயது 46) வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

முன்னாள் பிரதேச சபை

7➤

# சுங்கத்துக்கு டிமிக்கி கொடுத்து தங்கம் கடத்திய ஆசாமி கைது



கொழும்பு, ஒக 12

சுமார் 11 ரூபாய் கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள தங்க பிஸ்கட்களுடன் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 1 கிலோ 2.66 கிராம் தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

டுபாயிலிருந்து வாகன உதிரி பாகங்களை இறக்குமதி செய்யும் போர்வையில் அவை நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

வாகன உதிரி பாகங்களுக்கு விதிக்கப்பட்ட வரியை சுங்க அதிகாரிகளுக்கு செலுத்திவிட்டு திரும்பி வந்தபோது, சந்தேகத்தின் பேரில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர் சிலாபத்தில் வசிக்கும் 58 வயதுடையவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பஸ் – லொறி மோதிய விபத்தில் 26 பேர் காயம்

கொழும்பு, ஒக 12

கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதியின் மின்னேரியா பட்டுஓயா பகுதியில் நடந்த வாகன விபத்தில் 26 பேர் காயமடைந்துள்ளனர்.

மதுருஓயாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பேருந்து இன்று (12) அதிகாலை 3 மணியளவில் டிப்பருடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் பொலன்னறுவை, மின்னேரியா மற்றும் ஹிங்குராக்கொட வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

விபத்து குறித்து மின்னேரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (ஐ)








# மன்னாரில் நேற்று நள்ளிரவில் பதற்ற நிலை

கொழும்பு, ஒக 12

மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படும் காற்றாலை மின் கோபுரத்தின் பாரிய உதிரிப் பாகங்களை ஏற்றி வந்த வாகனத்தை நேற்று நள்ளிரவு மன்னார் தீவுப் பகுதிக்குள் நுழைய விடாமல் மக்கள் வழிமறித்துப் போராட்டம் நடத்தியமையை அடுத்து அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

காற்றாலை திட்டத்துக்கு எதிராக மக்கள் நடத்தி வரும் போராட்டம் 10 ஆவது நாளை எட்டும் நிலையில் நேற்று நள்ளிரவு காற்றாலை உபகரணங்களை ஏற்றி வந்த பாரிய வாகனத்தை மன்னார் தீவுக்கு நுழையும் வாசலான மன்னார் நீதிமன்ற மூன்றலில் மக்கள் வழிமறித்துத் தடுத்தனர்.

நேற்று பின்னிரவில் தொடங்கிய இந்த வழிமறிப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் மற்றும் மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புகள் ஆகியவற்றின் முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் அங்கு திரண்டு இருந்தனர்.

(ஐ)



# திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்த இந்திய கப்பல்










திருகோணமலை, ஓக 12

இந்திய கடற்படைக் கப்பலான 'ஐ.என்.எஸ். ரனா' திருகோணமலை துறைமுகத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்திற்காக நேற்று வந்தடைந்தது.

திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ள இக்கப்பல் 147 மீட்டர் நீளம் கொண்டதுடன்,

300 அங்கத்துவ குழுவினரைக் கொண்டுள்ளது, மேலும் இந்தக் கப்பலின் கட்டளை அதிகாரியாக கேப்டன் கே.பீ. ஸ்ரீசன் பணியாற்றுகின்றார்.

இக்கப்பல் நாடுகளின் கடற்படைகளுக்கு இடையே நல்லுறவை மேம்படுத்துவதற்காக, இலங்கை கடற்படை ஏற்பாடு செய்யும் பயிற்சி மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் அதன் குழுவினர்கள் பங்கேற்பார்கள், அத்துடன் தீவில் உள்ள பல சுவாரஸ்யமான இடங்களைப் பார்வையிடவும் திட்டமிட்டுள்ளனர்.

மேலும் இலங்கை இராணுவத்தினருக்கான ஒரு யோகா நிகழ்ச்சியை நடத்துவதற்கும், திருகோணமலையில் உள்ள சிறப்பு படகுப் படை தலைமையகத்திலும் கப்பலிலும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பல் வியாழக்கிழமை (14) நாடு திரும்பவுள்ளது.

(ஐ)

# இல்மனைட் சலவை ஆலையை பொலிஸ் காவலில் வைக்க உத்தரவு



கொழும்பு, ஓக 12

புத்தளம் வில்பத்து தேசிய பூங்காவின் எல்லையில், அருவக்காடு உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் பகுதியில் முறையான அனுமதியின்றி இயங்கிய இல்மனைட் சலவை ஆலையை, மேலதிக விசாரணைகள் முடியும் வரை பொலிஸ் காவலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட நீதிபதி மிகில் சிரந்த சத்துரசிங்க உத்தரவிட்டார்.

புத்தளம் நீதிமன்றத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து, இப்பகுதியில் முறையான சட்ட அனுமதியின்றி இல்மனைட் சலவை ஆலை இயக்கப்பட்டு, சுற்றுச்சூழல் அழிவு ஏற்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

வலான பாணந்துறை மத்திய மாசு கட்டுப்பாட்டுப் பிரிவு (ஊரு), புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் அனுமதியின்றி ஆலை இயக்கப்பட்டு, தொல்பொருள் திணைக்கள உத்தரவுகளை மீறி சுற்றுச்சூழலை பாதித்ததாக வந்த முறைப்பாட்டை அடுத்து, சமீபத்தில் இந்த இடத்தை சோதனையிட்டது.

நீதிமன்றத்தில் ஆதாரங்களை சமர்ப்பித்த மத்திய மாசு கட்டுப்பாட்டுப் பிரிவு, ஆலையால் பாரிய சுற்றுச்சூழல் சேதம் ஏற்பட்டதாக தெரிவித்தது.

பொலிஸ் பரிசோதகர் ஜனித குமார, இந்த உள்ளூர் நிறுவனம் புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் அனுமதியின்றி, ஒரு பெரிய நீர்த்தேக்கம் உட்பட நான்கு நீர்த்தேக்கங்களை நிர்மாணித்து, கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தியதாக நீதிமன்றத்தில் கூறினார்.

ஆலையின் சார்பாக ஆஜரான சட்டக் குழு, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உண்மைகளை மறுக்கவில்லை. ஆனால், புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்திடம் பலமுறை அனுமதி கோரியும் வழங்கப்படவில்லை எனவும், இதுதொடர்பாக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தது.

இவற்றைக் கருத்தில் கொண்டு, நீதிபதி மிகில் சிரந்த சத்துரசிங்க, விசாரணைகள் முடியும் வரை ஆலையை பொலிஸ் காவலில் வைக்குமாறு வலான பாணந்துறை மத்திய மாசு கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு உத்தரவிட்டார். இவ்வழக்கு செப்டம்பர் 11 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளது. (ஐ)

# மக்களின் எதிர்ப்பை மீறிய காற்றாலைக் கோபுரம் ஜனாதிபதியுடன் நாளை சந்திப்பு!



கொழும்பு, ஓக 12

மன்னாரில் அமைக்கப்பட்டு வரும் காற்றாலை தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பு நாளை இடம்பெறவுள்ளதாக வன்னிப் நாடாளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னாரில் அமைக்கப்பட்டு வரும் காற்றாலை மற்றும் இல்மனைட் அகழ்வு தொடர்பான மக்கள் போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பு இடம் பெறவேண்டும் என்ற கோரிக்கை பல தரப்பாலும் விடுக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மன்னார் மாவட்ட பொது அமைப்புகளுடன் ஜனாதிபதியுடனான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நாளை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

(ஐ)

# முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களை நீக்குவதை எதிர்த்து நீதிமன்றத்தில் மனு தாக்கல்



கொழும்பு, ஓக 12

கடந்த 07ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை நீக்குவது தொடர்பான சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிர்வாக செயலாளர் ரேணுகா பெரேராவினால் இந்த மனு நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

இந்த சட்ட மூலத்தின்படி, முன்னாள் ஜனாதிபதி அல்லது மனைவிக்கு வழங்கப்படும் எந்தவொரு வீடு, மாதாந்திர கொடுப்பனவும், மாதாந்திர செயலக கொடுப்பனவு, போக்குவரத்து, பிற வசதிகள் மற்றும் மாதாந்திர ஓய்வூதியமும் இரத்து செய்யப்படவுள்ளன.

இந்நிலையில் கடந்த 07ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை நீக்குவது தொடர்பான சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.(ஐ)

# சுற்றுலாப் பயணிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம்: உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

கொழும்பு, ஓக 12

சுற்றுலாப் பயணிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அரசாங்கத்தின் திட்டம் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தைப பாதிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எக்ஸ் பதிவொன்றில் அவர் பதிவிட்டுள்ளதாவது,

சுற்றுலாத் துறையில் ஆயிரக்கணக்கான சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் வாடகை வாகன ஓட்டுநர்கள் உள்ளனர்.

எனவே, அரசாங்கத்தின் இந்த முடிவு முறையான ஆலோசனை இல்லாமல் செயல்படுத்தப்பட்டால் அவர்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்குள்ளாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களை, இலங்கையில் வாகனம் செலுத்த அனுமதிக்கும் ஒரு ஒப்பந்தம் இலங்கையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.

எனினும், இந்த திட்டம் அவர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட வேண்டும். சுற்றுலா தொழில்துறையில் உள்ள பலரிடமிருந்து தனக்கு பல முறைப்பாடுகள் வந்துள்ளதாகவும், இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன்பு கவனமாக பரிசீலிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மை பணியாளர்கள் உடனடியாக பணிக்கு திரும்பவும்: சென்னை மாநகராட்சி அறிவுறுத்தல்!!

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மைப் பணியாளர்கள் அனைவரும் உடனடியாக வேலை நிறுத்தத்தை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டும் என தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியுள்ளது. இது குறித்து அரசு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

பெருநகர சென்னை மாநகராட்சியில் இராயபுரம் மற்றும் தி.ரு.வி.க. நகர் மண்டலங்களில் (மண்டலம் 5 மற்றும் 6) திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் தனியார் நிறுவனத்தின் வாயிலாக, கடந்த 16.07.2025 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் கடந்த 01.08.2025 முதல் வேலை நிறுத்தத்தில் சுய உதவிக் குழுவின் வாயிலாக பணியாற்றும் தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.




இந்த போராட்டம் குறித்த விளக்கம் பின்வருமாறு

கடந்த 2011ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியுடன், 9 நகராட்சிகள், 8 பேரூராட்சிகள் மற்றும் 25 கிராம ஊராட்சிகள் இணைக்கப்பட்டு, வார்டுகளின் எண்ணிக்கை 155ல் இருந்து 200 ஆக உயர்த்தப்பட்டு, 15 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சென்னை மாநகராட்சி விரிவுபடுத்தப்பட்ட போது, திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ளத் தேவைப்படும் கூடுதல் தூய்மைப் பணியாளர்கள், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் **(NULM)** கீழ், சுய உதவிக் குழுக்கள் மூலமாக தற்காலிக அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த முறையில், பணியாளர்களின் வருகை அடிப்படையில், தினக்கூலி ஊதியம் கணக்கிடப்பட்டு, அவர்களை பணியில் ஈடுபடுத்திய சுய உதவி குழுவின் வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தப்படுகிறது. பின்னர், அந்த வங்கி கணக்கிலிருந்து தற்காலிக தூய்மைப் பணியாளர்களின் ஊதியமானது ஒவ்வொருவரின் வங்கி கணக்கிற்கும் சுய உதவி குழுவால் செலுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு மேற்கூறிய வெளி முகமைப் பணியானது (முரவளழரசஉைபெ) சுய உதவி குழுக்களின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. கடந்த 2020ஆம் ஆண்டில் இருந்து, 10 மண்டலங்களில் முழுமையாகவும் 1 மண்டலத்தில் பகுதியாகவும் பொது - தனியார் பங்களிப்பு முறைமையில் **(PPP Mode)** திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கூறிய 11 மண்டலங்ளிலும், ஏற்கனவே சுய உதவிக் குழுக்களின் மூலம் பணியாற்றி வந்த 4994 தற்காலிக தூய்மைப் பணியாளர்களை தனியார் நிறுவனங்கள் ஈர்த்துக்கொண்டு, பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அவர்களுக்கான ஊதியம் தற்போது இந்த நிறுவனங்களால் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், சென்னை பெருநகர மாநகராட்சியில் எஞ்சியுள்ள நான்கு மண்டலங்களில், மண்டலம் 5 மற்றும் 6 இல் மேற்கூறிய அதே முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த மாற்றத்தின் போது, கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த தற்காலிக பணியாளர்கள் அனைவரும் புதிய நிறுவனத்தின் கீழ் இணைந்து பணியாற்றிட வழிவகை செய்யப்பட்டது.

சென்ற ஆண்டுகளில் 11 மண்டலங்களில் தூய்மை பணி முறை மாற்றப்பட்டபோது செயல்படுத்தப்பட்ட அதே நடவடிக்கைகள் தற்போதும் பின்பற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்த இரண்டு மண்டலங்களில், சுய உதவிக்குழு அமைப்பின் கீழ் பணியாற்றி வந்த தற்காலிக தூய்மைப்பணியாளர்கள் இதனை ஏற்காமல், தங்களை பணி நிரந்தரம் செய்யவேண்டும் என்றும் தனியார் நிறுவனத்தின் கீழ் பணிபுரிய மாட்டோம் என்றும் வலியுறுத்தி ரிப்பன் கட்டட வளாகத்தின் முன்புறத்தில், கடந்த 01.08.2025 முதல் காத்திருப்புப் போராட்டத்தை தொடங்கி நடத்தி வருகின்றனர்.

இதனால் பல்வேறு சேவைகளைப் பெறுவதற்காக சென்னை மாநகராட்சிக்கு வரும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் பாதிக்கப்படுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் கடந்த 06.08.2025 அன்றும், அதனைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களாலும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், இணை ஆணையர் (சுகாதாரம்) மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோராலும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மைப் பணியாளர்களின் பிரதிநிதிகளுடன் 12-க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டன.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது, பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த 2020ஆம் ஆண்டில் மண்டலம் 1, 2, 3, மற்றும் 7ல் பகுதி (3 வார்டுகள்), 9, 10, 11, 12, 13, 14, 15 ஆகிய மண்டலங்களில் தூய்மைப் பணி முறை மாற்றப்பட்டபோது அம்மண்டலங்களில் பணிபுரிந்து வந்த சுய உதவிக்குழுக்களின் தற்காலிகத் தூய்மைப்பணியாளர்கள், சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனங்களில் பணியில் சேர்ந்து, பணியாற்றி வருவதைப்போல, மண்டலம் 5 மற்றும் 6-ல் தற்போது பணியாற்றி வரும் தற்காலிக தூய்மைப்பணியார்களும் உரிய பணி பாதுகாப்பு மற்றும் நலத்திட்ட உதவிகளுடன் பணியில் சேர்ந்து, தங்களது பணிகளை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மைப் பணியாளர்களின் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகளும், தொழில் தீர்ப்பாயத்தில் முறையீடுகளும் செய்யப்பட்டுள்ளதால், அவற்றின் மீது வரும் முடிவுக்குட்பட்டு, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மண்டலம் 5 மற்றும் 6-ல் வசிக்கும் மற்றும் வந்து செல்லும் ஏறத்தாழ 20 லட்சம் பொதுமக்களுக்கான பொது சுகாதார சேவைகள் பாதிக்கப்படுவது மிக முக்கியமான பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. போராட்டம் தொடர்வதால் இந்த மண்டலங்களில் தூய்மைப் பணிகளில் தொய்வு ஏற்பட்டு குப்பைகள் தேங்கி மக்களுக்கு பெரும் சுகாதார பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு சென்னை மாநகராட்சிக்கு உள்ளதால் இதற்கான அனைத்து முயற்சிகளையும் சென்னை பெருநகர மாநகராட்சி தொடர்ந்து எடுத்து வருகின்றது.

கடந்த 2020 ஆம் ஆண்டு, பல்வேறு மண்டலங்களில் பணிபுரிந்து விருப்பக் கடிதம் அளித்த 4994 பணியாளர்களும் உர்பேசர் (ருசடியளநச) மற்றும் ராம்கி (சுயஅமல) ஆகிய தனியார் நிறுவனங்களில், அச்சமயம் பணியில் ஈர்த்துக் கொள்ளப்பட்டனர்.

தற்பொழுது மண்டலம் 5 மற்றும் 6ல் மேற்கொள்ளப்படும் தூய்மைப்பணிகள் ராம்கி (சுயஅமல) நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டு, 16.07.2025 முதல் அந்நிறுவனம் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொண்டு வருகின்றது. இந்நிறுவனம், ஒப்பந்தப்படி, மொத்தம் 3,809 தூய்மைப் பணியாளர்களை பணியில் நியமிக்க வேண்டும். தற்போது வரை 1,770 பணியாளர்களை இந்நிறுவனம் பணியமர்த்தியுள்ளது. மீதமுள்ள 2,039 பணியிடங்கள், ஏற்கனவே பணியாற்றி வந்த சுய உதவிக் குழுக்களின் தற்காலிக தூய்மைப் பணியாளர்களுக்காக பெருநகர சென்னை மாநகராட்சி அறிவுறுத்தலின்படி ஒதுக்கப்பட்டுள்ளன.

இதில் 300 தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் பணியில் சேர்ந்து பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே எந்தவொரு தற்காலிக தூய்மைப் பணியாளரும் நீக்கப்படவோ, பணி மறுப்பு செய்யப்படவோ இல்லை என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

இதுநாள் வரை சுய உதவிக் குழுக்கள் மூலமாகவே பணியில் ஈடுபடுத்தப்பட்ட தற்காலிக தூய்மைப் பணியாளர்கள், தற்போது தனியார் நிறுவனத்தில் தொழிலாளர் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு பணியாளர்களாக ஈடுபடுத்தப்படவுள்ளனர். எனவே இந்த புதிய முறையின்கீழ் இதுவரை கிடைக்காத பணிப்பாதுகாப்பும் பல சலுகைகளும் இந்தப் பணியாளர்களுக்கு கிடைத்திட வழி ஏற்பட்டுள்ளது. இப்பணியாளர்களுக்கு

தற்போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் அனைவரும் பொதுநலன் கருதியும், தங்களது பணிப்பாதுகாப்பு குறித்த உண்மை நிலையினை புரிந்து கொண்டும், உயர்நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்பு மற்றும் தொழில் தீர்ப்பாயத்தின் முடிவுகளை எதிர்நோக்கி, உடனடியாக வேலை நிறுத்தத்தை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (ஐ)

# ராகுல் காந்தி உள்பட எம்பிக்கள் கைது: விஜய் கண்டனம்



தவெக தலைவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், “பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, டெல்லியில் தேர்தல் ஆணையம் நோக்கி சென்ற ராகுல் காந்தி மற்றும் எம்.பி.க்கள் கைது செய்யப்பட்டது கடும் கண்டனத்திற்குரியது” என கூறியுள்ளார்.

மற்றொரு அறிக்கையில், “போராடி வரும் தூய்மைப்பணியாளர்களை நான் நேரில் சந்திக்க சென்றால், போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படும் என கருதிய தூய்மைப்பணியாளர்கள், தவெக தலைமை அலுவலகத்திற்கே வந்து என்னை சந்தித்தனர். அவர்களின் அறவழிப் போராட்டத்திற்கும் சட்டப் போராட்டத்திற்கும் தவெக உறுதியாகத் துணை நிற்கும்” என கூறியுள்ளார். (ஐ)

# 4 ஐபிஎஸ் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு

காவல் துறையில் 4 ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. திருச்சி சரக டி.ஐ.ஜி. வருண் குமார், சென்னை சிபிசிஐடி டி.ஐ.ஜி. ஆக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

4 ஐபிஎஸ் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதுகுறித்த உத்தரவை தமிழ்நாடு கூடுதல் தலைமை செயலாளர் தீரஜ்குமார் வெளியிட்டார்.



அதன்படி, திருச்சி டிஐஜி வருண் குமார் சென்னை சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டுள்ளார். டான்ஜெட்கோ தலைமை விழிப்புணர்வு அதிகாரியாக இருந்த டிஜிபி பிரமோத்குமார், சென்னை ஊர்க்காவல்படை டிஜிபி ஆக நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை ஊர்க்காவல் படை ஐஜி ஜெயஸ்ரீ, மாநில குற்ற ஆவண காப்பக ஐஜி ஆக நியமிக்கப்ட்டுள்ளார்.

சென்னை குற்ற ஆவண காப்பக ஏடிஜிபி ஆயுஷ்மான் திவாரி, டான்ஜெட்கோ லஞ்ச ஒழிப்பு துறை தலைமை விழிப்புணர்வு அதிகாரி (ஏடிஜிபி) ஆக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# அங்கீகாரம் கிடைக்காத லீஸ் மைட்னர்!

ஆல்ஃபிரட் நோபல் நினைவாக 1901ஆம் ஆண்டு முதல் பல துறைகளில் உள்ள சாதனையாளர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை நோபல் பரிசு பெற்றவர்களில் ஏறக்குறைய அறுபத்து ஐந்து பேர் பெண்கள். அதே நேரம், நோபல் பரிசு பெற்ற ஆண்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள்? இரண்டு அல்லது மூன்று மடங்கு இருக்கலாம் என்று நினைத்தால் தவறு. அதற்கும் மேலே. 905 பேர் இருக்கிறார்கள். 65க்கும் 905க்கும் உள்ள இடைவெளி ஏன்? இதற்குத் தகுதியான பெண்கள் அந்தத் துறையில் இல்லை என்று சொல்லிவிட முடியாது. வரலாற்றில் பின்னோக்கிப் பார்க்கும் போது சில உண்மைகளை அறியலாம். இதோ இந்த அணுப்பிளவு பற்றி ஆய்வு செய்த விஞ்ஞானியின் கதையைப் பார்ப்போம்.

லீஸ் மைட்னர். இவர் இயற்பியல் துறையில் (நியூக்ளியர் பிசிக்ஸ்) மிகப்பெரிய ஆராய்ச்சியாளர். ஆராய்ச்சிப்பணி இவரது வாழ்நாள் முழுவதுமே முக்கியப் பங்கு வகித்திருக்கிறது. .



லீஸ் பிறந்தது ஆஸ்திரியாவில் உள்ள வியன்னா. அவரது தந்தை பிலிப் மைட்னர் ஒரு வழக்கறிஞர். அவர்கள் வீட்டில் மொத்தம் எட்டுப் பிள்ளைகள். லீஸ் மூன்றாவதாகப் பிறந்தார். அவர்கள் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இருந்தாலும் தந்தையின் உந்துதலால் பல துறைகளில் கற்றுத் தேர்ந்தனர். சிறுமி லீஸின் ஆர்வத்தைப் புரிந்து கொண்டு தனியாக இயற்பியல் கற்பதற்கு ஏற்பாடு செய்தார் அவரது தந்தை. காரணம், அப்பொழுது இருந்த அரசுப் பள்ளிகளில் பெண்கள் அறிவியல் படிக்க அனுமதி இல்லை.

கிரேக்கம், பிரெஞ்சு மொழிப் பாடங்களைப் படித்தாலும் லீஸ/க்குக் கணிதத்திலும் இயற்பியலிலும் ஆர்வம் அதிகம். அதனால் அவர் வியன்னா பல்கலைக்கழகத்தில் இயற்பியல் துறையில் படிக்க ஆரம்பித்தார். அப்போது அந்தப் பல்கலைக்கழகத்தில் பயிலும் முதல் மாணவியாக அவர் இருந்தார். 1906ஆம் ஆண்டு அவர் முனைவர் பட்டம் பெற்றபோது, வியன்னாவில் பிஎச்டி பெற்ற இரண்டாவது பெண்மணியாக விளங்கினார். வியன்னாவில் வேலை செய்வதற்கு ஒரு பள்ளியிலோ அல்லது கண்ணாடிக் கடையிலோதான் வேலை கிடைக்கும் என்கிற நிலையில், அவர் பெர்லினுக்குச் சென்றார்.

பெர்லினில் 1912ஆம் ஆண்டு கேசர் வில்ஹம் இன்ஸ்டிட்யூட் வேதியியல் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். ஆராய்ச்சியில் ஈடுபட ஆர்வம் காட்டினார். அங்கே போல்ஸ்மேன் (டீழடவணஅயஉ) என்பவர் அவருக்கு உதவிகள் புரிந்தார். போல்ஸ்மேன் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்த மேக்ஸ் பிளான்க் (ஆயஒ ீடயஉம) அறிமுகம் கிடைத்தது. மேக்ஸ/க்குப் பெண்கள் இந்தத் துறையில் ஈடுபடுவதும் தனது வகுப்பறையில் பயில்வதும் பிடிக்காத ஒன்றாக இருந்தாலும் அதற்கு ஒரு விதிவிலக்காக லிசாவைத் தன் வகுப்பில் சேர்த்துக்கொண்டார். ஆனாலும் ஆய்வுகளில் பங்குகொள்ள அனுமதிக்கவில்லை. அவர் அங்கேயும் குறைவான சம்பளம் தரக்கூடிய உதவியாளராகப் பணி செய்து காலத்தைக் கழித்தார்.

அருகிலேயே ஒரு வேதியியல் ஆராய்ச்சிக் கூடம் இருக்கிறது. அங்கே ஓட்டோ ஹான் (முவவழ உயாெ) என்கிற வேதியியலாளர் வேலை செய்து வருகிறார். அங்கு சென்று தனக்கு விருப்பமான சில ஆய்வுகளை மேற்கொள்ள லீஸ் முயன்றார். 1917ஆம் ஆண்டு ஒரு புதிய தனிமத்தைக் கண்டுபிடித்தார். அதன் பெயர் புரோடாக்டினியம். (ீசழயஉவைைெரஅ). அவர் யூதர் என்பதால் அதிலும் ஒரு சிக்கல் வந்தது. 1933ஆம் ஆண்டு அடால்ஃப் ஹிட்லர் ஜெர்மனியின் சான்சலரானார். அவர் ஆட்சி வலுப்பெற்றதும் யூதர்களைப் பணிகளில் இருந்து நீக்கினார். எப்படியோ 1938 வரை ஜெர்மனியில் தாக்குப்பிடித்தார் லீஸ்.

அதன் பின்னர் வேறு வழியில்லாமல் பெர்லினை விட்டு அவர் வெளியேற நேர்ந்தது. அப்பொழுது ஓட்டோ ஹான் அவருடன் வீட்டிற்கு வந்து உதவி செய்தார். 30 ஆண்டுகள் பெர்லினில் வாழ்ந்தாலும் இரண்டு பெட்டிகளுடன் புறப்பட்டார் லீஸ். அப்பொழுது தனது தாயின் வைர மோதிரத்தை வைத்துக்கொள்ளுமாறு ஆட்டோ ஹான் அவருக்குத் தந்தார்.

யூதர்கள் பெர்லினை விட்டுப் பத்திரமாக வெளியே செல்வது சாதாரண காரியம் அல்ல. அதற்கு ஓர் ஒற்றர் பால் ரோஸ்பாட் உதவி செய்தார். ரகசிய ஒற்றர் பல யூதர்களைப் பத்திரமாக பெர்லினில் இருந்து வெளியேற உதவி செய்தார். அவர் லீஸை ரயில் ஏற்றினார். அந்த ரயிலிலிருந்து கிரிக் கோஸ்டர் லீஸை அழைத்துச் சென்றார். அவர் ஸ்டாக் ஹோம்க்குச் சென்று அங்கே ஓர் இடத்தில் வேலை செய்தார். ஆனால் அங்கே ஆய்வுக்கான வழி இல்லை. தொடர்ந்து ஓட்டோஹானிடம் தொடர்பில் இருந்தார் லீஸ். இருவரும் ஆராய்ச்சிகளைப்பற்றி தொலைபேசியில் பேசி வந்தனர். தனக்குச் சவாலான கடினமான விஷயங்களை லீஸிடம் கேட்டுத் தெளிந்தார் ஓட்டோஹான்.

1938ஆம் ஆண்டு யுரேனியம் நியூட்ரான்களால் மோதும்போது அதைவிட எடை அதிகமான தனிமங்களே உருவாகும் என்று பல ஆராய்ச்சியாளர்களும் வாதிட்டு வந்தனர். அந்த வருடம் டிசம்பரில் கிறிஸ்துமஸ் விடுமுறையின்போது ஓட்டோ ஃபிரிஷ் என்கிற லீஸின் உறவினர் அவரைச் சந்தித்தார். அவரும் ஓர் இயற்பியலாளர். அவர் நீல்ஸ் போருடன் பணி செய்து வந்தார்.

இது பற்றி விவாதித்தபடியே அவர்கள் பனிச்சறுக்கு விளையாட்டுப் பகுதியில் ஒரு மரத்தருகே கணக்குகளைப் போட்டார்கள். அப்பொழுது லீஸ் யுரேனியத்தின் நியூக்கிளியசை ஒரு நீர்த்துளி என்று எடுத்துக் கொண்டால் அதில் நியூட்ரான் மோதும்போது செகண்டரி நியூட்ரான்ஸ் உருவாகி இது ஒரு தொடர் பிளவாக அமையும். இது பேரியம் (டியசரைஅ) போன்ற பல வகை தனிமங்கள் உருவாகக் காரணமாக இருக்கும் என்பதை முதன் முதலில் கூறினார். அதன் பிறகு ஊருக்குத் திரும்பிய ஓட்டோ ஃபிரிஷ் இதைப் பற்றி நீல்ஸ் போரிடமும் மற்ற அறிவியலாளர்களிடமும் ஆலோசித்தார். இது ஒரு சிறப்பான கண்டுபிடிப்பு என்று பலரும் வியந்தனர். இதுவே பின்னாளில் நியூக்ளியர் பாம் செயல்பாட்டிற்கு உதவக்கூடிய கருத்தாக்கமாக இருந்தது. இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்த ஓட்டோ ஹானுடன் சேர்ந்து பல நாள் வேலை செய்து அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அந்த வேதியியல் மாற்றத்துக்கு அணுக்கரு பிளவு (ரெஉடநயச களைளைழை) என்று பெயர் சூட்டினார்கள். அந்த ஆய்வுக் கட்டுரை வெளியான போது லீஸின் பெயர் அதிலிருந்து விடுபட்டிருந்தது. அவரும் ஸ்ட்ராஸ்மெனும் யூதர்கள் என்பதால் அவர்கள் பெயர் குறிப்பிடப்படவில்லை என்று கூறப்படுகிறது. இது அவருக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தாலும் அவர் அதைப் பொருட்படுத்தாமல் தனது பணியைத் தொடர்ந்து செய்து வந்தார்.

1939 நேச்சர் **(Nature)** பத்திரிகையில் இந்த ஆய்வுக் கட்டுரை வெளியானது. 1945ஆம் ஆண்டு ஓட்டோ ஹானுக்கு இதற்காக நோபல் பரிசும் கிடைத்தது. அப்போதும் லீசாவின் பெயர் வெளியில் தெரியவில்லை. 1949இல் அவர்கள் கண்டுபிடித்த புரோடாக்டினியம் தனிமத்திற்கு ஓட்டோ ஹான் மற்றும் லீஸ் மீட்னர் இருவருக்கும் அங்கீகாரம் கிடைத்தது . இரண்டாம் உலகப்போரின் போது ஓட்டோ ஹான் ஹிட்லரின் நாஜிப் படையில் வேலைக்கு அமர்த்தப்பட்டதால்,

யூதர்கள் பெர்லினை விட்டுப் பத்திரமாக வெளியே செல்வது சாதாரண காரியம் அல்ல. அதற்கு ஓர் ஒற்றர் பால் ரோஸ்பாட் உதவி செய்தார். ரகசிய ஒற்றர் பல யூதர்களைப் பத்திரமாக பெர்லினில் இருந்து வெளியேற உதவி செய்தார். அவர் லீஸை ரயில் ஏற்றினார். அந்த ரயிலிலிருந்து கிரிக் கோஸ்டர் லீஸை அழைத்துச் சென்றார். அவர் ஸ்டாக் ஹோம்க்குச் சென்று அங்கே ஓர் இடத்தில் வேலை செய்தார். ஆனால் அங்கே ஆய்வுக்கான வழி இல்லை. தொடர்ந்து ஓட்டோஹானிடம் தொடர்பில் இருந்தார் லீஸ். இருவரும் ஆராய்ச்சிகளைப் பற்றி தொலைபேசியில் பேசி வந்தனர்.

# ஸ்பெயின், போர்ச்சுக்கல், இத்தாலி நாடுகளில் காட்டுத் தீ: தெற்கு ஐரோப்பாவில் 44 டிகிரி செல்சியஸ் அளவுக்கு கொளுத்தும் வெப்பம்!




தெற்கு ஐரோப்பிய நாடுகளை அடுத்தடுத்து வெப்ப அலை தாக்கி வருவதால் 44 டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெப்பம் கொளுத்தியது. இதுவரை இல்லாத வகையில் ஒரே நேரத்தில் சுமார் 10 நாடுகளில் காட்டுத்தீ பற்றி எரிந்து கொண்டு இருக்கிறது. கடல் மட்டத்தில் இருந்து 350 மீட்டர் உயரத்தில் இருக்கும் ஸ்பெயினின் டெலைய் டி லா நகர் 42 டிகிரி செல்சியஸ் வெப்பம் கொளுத்தியது. இது ஒரு பக்கம் இருக்க, அதிக வெப்பம், பலத்த காற்றால் காட்டுத்தீ தொடர்ந்து பற்றி பரவி வருகிறது. வடக்கே உள்ள யுனெஸ்கோ பாரம்பரிய தலமான தேசிய பூங்காவை நெருங்கிய காட்டுத்தீ, குடியிருப்புகளை சூழ்ந்து வாகனங்களையும் பொசுக்கியது.

போர்ச்சுக்கல் நாட்டின் பல இடங்களில் 43 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவானது. மத்திய போர்ச்சுக்கலில் பற்றிய காட்டுத்தீ, நெடுஞ்சாலையை கடந்து குடியிருப்புகளை சூழ்ந்தது. வாளிகளில் தண்ணீர் ஊற்றி மக்கள் தீயை நெருங்கவிடாமல் தடுக்க முயன்றனர். இத்தாலியில் தேசிய பூங்காவில் பற்றிய காட்டுத்தீ, 3ம் நாளாக கொழுந்துவிட்டு எரிந்து வருகிறது. தீயை கட்டுப்படுத்த முடியாமல் வீரர்கள் திணறி வருகின்றனர். குரேஷி கடற்கரையையொட்டி உள்ள சுற்றுலா தளத்திலும் காட்டுத்தீ பற்றியது.

அங்கு 450 ஏக்கர் பரப்பிலான பைன் மரங்களை சுவடு தெரியாமல் பொசுக்கிய நிலையில், தீயை அணைக்கும் பணி நடந்து வருகிறது. மாண்டி நீக்ரோ நாட்டில் மலை பகுதியையொட்டி உள்ள தெருநாய்கள் காப்பகத்தை தெருநாய்கள் சூழ்ந்தது. நாய்கள் பதற்றத்தில் ஓலமிட்டனர்.

தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து அவற்றை விடுவித்து தீயை கட்டுப்படுத்தினர். இதேபோல அல்பேனியா, கொசோவோ போன்ற பால்கன் நாடுகளிலும் காட்டுத்தீ பற்றி நூற்றுக்கணக்கான மக்களை இடம் பெயரவைத்தது. (ஐ)

## அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழப்பு




அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். டெக்சாஸின் ஆஸ்டினில் உள்ள டார்கெட் என்ற கடைக்கு வெளியே பிற்பகல் 2:15 மணிக்கு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அடையாளம் தெரியாத 32 வயதுடைய மர்ம நபர் வாகன நிறுத்தும் இடத்தில் நின்றிருந்த வாடிக்கையாளர்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தாக்குதலுக்குப் பிறகு அந்த நபர் திருடப்பட்ட காரில் சம்பவ இடத்திலிருந்து தப்பி சென்றார். தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு அதிகாரிகள் விரைந்த நிலையில், அங்கு மூன்று பேர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இருந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் குறித்து எந்த தகவலும் வெளியிடப்படவில்லை, மேலும் எந்த நோக்கமும் அடையாளம் காணப்படவில்லை என போலீசார் தகவல் தெரிவித்தனர். மேலும், மர்ம நபரை தேடும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

## மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து சென்னைக்கு வந்த சரக்கு விமானம், ரன்வேயில் தரையிறங்கிய போது தீப்பிடித்து விபத்து




மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து சென்னைக்கு வந்த சரக்கு விமானம், ரன்வேயில் தரையிறங்கிய போது தீப்பிடித்து விபத்து ஏற்பட்டது. ஓடுபாதையில் சரக்கு விமானம் தரையிறங்கியபோது விமானத்தின் 4ஆவது எஞ்சினில் தீப்பற்றியது. எஞ்சினில் தீப்பிடித்த நிலையிலும், சரக்கு விமானத்தை விமானிகள் பத்திரமாக தரையிறக்கினர். விமானம் நிறுத்தப்பட்டதும், உடனடியாக இழுவை வாகனங்கள் மூலம், விமான நிறுத்தப் பகுதிக்கு கொண்டுவரப்பட்டு தீ அணைக்கப்பட்டது. (ஐ)

## பாதி உலகையே அழித்துவிடுவோம் பாக். அணு ஆயுத மிரட்டலுக்கு இந்தியா அடிபணியாது:

### அமெரிக்காவில் அசிம் முனீரின் அச்சுறுத்தல் பேச்சுக்கு பதிலடி



பாகிஸ்தான் ராணுவ தலைவர் அசிம் முனீர் இரண்டாவது முறையாக ஐந்து நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். இந்நிலையில் புளோரிடாவின் டம்பாவில் உள்ள பாகிஸ்தான் புலம்பெயர்ந்தோரிடையே அசிம் முனீர் உரையாற்றினார். அப்போது பேசிய முனீர், இந்தியா உடனான சமீபத்திய மோதலின்போது பாகிஸ்தான் உறுதியாகவும், வலுவாகவும் பதிலளித்தது. காஷ்மீர் இந்தியாவின் உள் விஷயம் அல்ல" என்றார். மேலும் முனீர் பேசுகையில், சிந்து நதியின் குறுக்கே இந்தியா அணை கட்டினால், நாங்கள் 10 ஏவுகணைகளை வீசி அதை தகர்ப்போம். நாங்கள் வீழ்ச்சியடைகிறோம் என்று நினைத்தால் எங்களுடன் சேர்ந்து பாதி உலகத்தையும் அழிப்போம் என்று கூறினார்.

அமெரிக்க மண்ணில் இருந்து பாகிஸ்தான் ராணுவ தலைவர் அசிம் முனீரின் இந்த அச்சுறுத்தல் பேச்சுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அசிம் முனீரின் இந்த பேச்சானது அணு ஆயுதங்களை கொண்ட பொறுப்பற்ற நாடு பாகிஸ்தான் என்பதை காட்டுகின்றது என்று விமர்சித்துள்ளது. இது தொடர்பாக இந்திய வெளியுறவு துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அணு ஆயுத அச்சுறுத்தலுக்கு இந்தியா அடிபணியாது. தேசிய பாதுகாப்பை பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுப்போம் என்று இந்தியா ஏற்கனவே தெளிவுபடுத்தி உள்ளது. இந்த கருத்துக்கள் நட்பு ரீதியான மூன்றாவது நாட்டின் மண்ணில் இருந்து கூறப்பட்டு இருப்பது வருந்தத்தக்கது" என்று குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

இதன் ஆரம்பகட்டமாக யாழ். குறிகாட்டுவான் இறங்குதுறைமுகத்தை விஸ்தரிப்பதற்குரிய நடவடிக்கையை ஜனாதிபதி யாழ். விஜயத்தின்போது ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அத்துடன், காரைநகர் உட்பட யாழில் கரையோரப் பகுதிகளில் கடற்றொழிலாளர்களின் நலன்கருதி பல திட்டங்களும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. மேலும் பல சந்திப்புகளையும் ஜனாதிபதி யாழ். விஜயத்தின்போது நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளார்.

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்துப் பொலிஸ்மா அதிபருக்கான பதவியில் வெற்றிடம் ஏற்பட்டது.

இதனையடுத்துப் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பெயரைப் புதிய பொலிஸ்மா அதிபர் பதவிக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பரிந்துரைத்து அரசமைப்பு பேரவைக்கு அனுப்பியிருந்தார்.

இந்தநிலையிலேயே பொலிஸ்மா அதிபராக பிரியந்த வீரசூரியவை நியமிக்க அரசமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் அட்டிகல்லே வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போதே, அவர் மீது காரில் பயணித்த அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, அவர் பல துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளாகி ஹோமாகம வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர்களை அடையாளம் கண்டு கைது செய்ய பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

## பெருந்தொகையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செனவிரத்னவின் கீழ் இயங்கும் போதைப்பொருள் மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்ட விசேட தேடுதலின் போது அறுகுவெளி பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இருவரிடன் மேற்கொண்ட சோதனையின்போது உடைமையில் இருந்து கேரள கஞ்சா இருந்தமை தெரியவந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரிடமும் மேற்கொண்ட மேலதிக விசாரணையில் அறுகுவெளி பகுதியில் பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 284 கிலோ 415 கிராம் நிறையுடைய 7 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்..

கைது செய்யப்பட்ட இருவரும் குருநகர் பகுதியை சேர்ந்தவர்கள் எனவும், ஒருவர் யாழ். மாவட்டத்தில் பிரபல போதைப்பொருள் வர்த்தகர் எனவும், அவர் அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுவதுடன் சமூக செயற்பாட்டில் ஈடுபடுவதாகவும் தன்னை அடையாளப்படுத்தி வந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## வாக்குறுதிகளை செயல்படுத்துவதில் கால தாமதம்- அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் குற்றசாட்டு!

இடமாற்ற உத்தரவுகளை செயல்படுத்துதல் மற்றும் வைத்தியசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல் ஆகிய செயற்பாடுகள் தொடர்பில் சுகாதார அமைச்சர் அளித்த வாய்மொழி வாக்குறுதிகளை செயல்படுத்துவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இடமாற்ற உத்தரவுகளை செயல்படுத்துதல் மற்றும் வைத்தியசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக, சுகாதார அமைச்சருடன் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் தொழிற்சங்க நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலிக்க வேண்டியுள்ளது என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சருக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்பில் அதன் நிறைவேற்றுக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெருந்தொகையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 25 பேரும், சந்தேகத்தின் பேரில் 691 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 218 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 157 பேரும், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 73 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 17 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 427 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது

## அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வு- இலங்கை குறித்த அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ள வோல்கர் டர்க்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது அமர்வு அடுத்த மாதம் நடைபெறவுள்ள நிலையில், “இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை” குறித்த தனது அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் வோல்கர் டர்க் சமர்ப்பிக்க உள்ளார்.

மனித உரிமைகள் பேரவையின் 60வது அமர்வு சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் செப்டம்பர் 08ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், ஒக்டோபர் 08ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள்பேரவையின் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படி, அமர்வின் தொடக்க நாளில் ஆணையர் வோல்கர் டர்க் ‘இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை’ என்ற தலைப்பில் இலங்கை குறித்த தனது அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் வோல்கர் டர்க் ஜூன் மாதம் இலங்கைக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், இலங்கை பற்றிய தனது அவதானிப்புகளை அறிக்கையில் இணைக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழி தளத்திற்கு அவர் மேற்கொண்ட விஜயம் தொடர்பான தகவல்கள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் முக்கியமாக இடம்பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், அடுத்த மாதம் நடைபெற உள்ள ஐநா மனித உரிமைகள் பேரவையின் 60வது அமர்வில் இலங்கை குறித்த புதிய தீர்மானத்தை முன்வைக்க பிரித்தானியா மற்றும் கனடா திட்ட மிட்டுள்ளன.

இதேவேளை, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் ருடேசுஊ அமர்வில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு மேலும் இலங்கை அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ அறிக்கையை சமர்ப்பிக்க உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வடக்கு - கிழக்கு மாகாணங்கள் முழுவதும் பூரண ஹர்த்தால்- எம்.ஏ.சுமந்திரன் விடுத்துள்ள அறிவுறுத்தல்!

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் முழுவதும் ஒகஸ்ட் 15ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) ஹர்த்தால் தினமாக அனுஸ்டிக்கப்படவுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்துள்ள நிலையில், மக்களுக்கான அவசர சேவைகளைப் பேணுவதைப்போல், பக்தர்கள் கோயில்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து சேவைகளையும் பேணுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கு - கிழக்கு முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதற்குப் பலர் ஆதரவு தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளை, அன்றைய தினம் மடுமாதா கோயிலில் விசேட நிகழ்வு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நல்லூர் கந்தசாமி கோயிலிலும், வேறு பல இந்துக் கோயில்களிலும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. இவற்றை அனுசரித்து மக்களுக்கான அவசர சேவைகளைப்பேணுவதைப் போல், விதிவிலக்காகப்பக்தர்கள் கோயில்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து சேவைகளையும் பேணுமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் கோருகின்றோம். அதுதவிர்ந்து, மற்றைய அனைத்து தரப்புக்களையும் இந்தக் ஹர்த்தாலுக்குப் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

## அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு: அநுர வெளியிட்ட அறிவிப்பு

கொழும்பு, ஒக. 12

இலங்கையின் அரச சேவைக்கு புதியவர்களை உள்ளீர்ப்பது குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, அரச சேவைக்கு 62 ஆயிரம் பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெறும் 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கும், பொறுப்புள்ள இளைஞர் தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இளைஞர்களை அரசியல் கைப்பாவைகளாக மாற்றாமல், நாட்டின் எதிர்காலத்தை வழிநடத்தும் தலைவர்களாக உருவாக்குவதே இதுவரையிலான மாநாட்டின் இலக்காக இருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பொதுச்சேவையில் உள்ள அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு 10 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் 10 ஆவது நாளாத் தொடர் போராட்டம்




மன்னார், ஒக. 12

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு த் திட்டங்களை உடனடியாக நிறுத்தக் கோரி, மன்னார் மாவட்ட மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் இணைந்து நடத்தி வரும் போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமை 10ஆவது நாளாகத் தொடர்கின்றது.

மன்னார் தாழ்வுபாடு கிராம மக்கள் இன்று சுழற்சி முறையில் கலந்துகொண்டு தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

நேற்று நள்ளிரவு காற்றாலை திட்டங்களுக்கான பாரிய உபகரணங்களைப் பொலிஸ் பாதுகாப்புடன் மன்னார் தீவுக்குள் கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், போராட்டக்காரர்களின் கடும் எதிர்ப்பு காரணமாக உபகரணங்களை ஏற்றி வந்த பாரவூர்தி உள்ளே நுழைய முடியாமல் தடைபட்டது.

இதன்போது போராட்டக்காரர்களை அச்சுறுத்தி, புகைப்படம் எடுத்து அங்கிருந்து வெளியேற்ற பொலிஸார் முயற்சித்தபோதும், போராட்டக்காரர்களின் தொடர் எதிர்ப்பு காரணமாக, அந்த வாகனம் மன்னார் நீதிமன்ற வளாகம் முன்பாக நிறுத்தப்பட்டது.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.08.2025 வெளியிடப்பெற்றது.